# யோவான் சுவிசேஷம் ஒரு அறிமுகம்

## துவக்க அறிக்கைகள்

அ. மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்கள் இயேசுவின் பிறப்பைக்கொண்டு துவங்குகிறது. மாற்கு இயேசுவின் ஞானஸ்நானத்தோடு துவங்குகிறார். ஆனால் யோவான் படைப்பின் முன் இருந்து தன் சுவிசேஷத்தை துவக்குகிறார்.

ஆ. யோவான் நசரேயனாகிய இயேசுவின் முழு தெய்வத்தன்மையை முதல் அதிகாரம் முதல் வசனம் துவங்கி சுவிசேஷம் முழுவதும் முக்கியத்துவப்படுத்திகாட்டுகிறார். மற்ற மூன்று சுவிசேஷகர்களும் இந்த உண்மையை தாமதமாகதான் தங்கள் சுவிசேஷங்களில் காட்டுகிறார்கள் ("மேசியா குறித்த ரகசியங்கள்").

இ. யோவான் தன் சுவிசேஷத்தை மற்ற மூன்று சுவிசேஷங்களின் அடிப்படை உண்மைகளைக் கொண்டே உருவாக்கி வெளிப்படுத்துகிறார். அவர் துவக்க சபையின் (முதல் நூற்றாண்டு) தேவைக்கேற்ப இயேசுவின் வாழ்வு மற்றும் போதனைகளை பின் சேர்த்து விளக்க முயற்சிக்கிறார்.

ஈ. யோவான் தன் சுவிசேஷத்தில் ஒரு அமைப்பைக் கொண்டு வழங்குவதாக தோன்றுகிறது

1. ஏழு அதிசயங்கள்/அறிகுறிகள் மற்றும் அதன் அர்த்தங்கள்
2. தனி நபர்களோடான இருபத்தேழு நேர்முகபேச்சி
3. நிச்சயமான ஆராதனை மற்றும் விருந்து நாட்கள்
    - அ. ஓய்வு நாள்
    - ஆ. பஸ்கா (cf. 5-6 அதிகாரங்கள்)
    - இ. கூடாரங்கள் (cf. 7-10 அதிகாரங்கள்)
    - ஈ. ஹனுக்கா (cf. 10:22-39)
4. "நானே" அறிக்கைகள்
    - அ. தெய்வீக பெயர்களுக்கு சம்மந்தப்பட்ட (யகோவா)
        1. நானே அவர் (4:26; 8:24, 28; 13:19; 18:5-6)
        2. ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் (8:54-59)
    - ஆ. ஒப்புமை பெயர்கள்
        1. ஜுவ அப்பம் நானே (6:35, 41, 48, 51)

2. நானே இந்த உலகத்தின் ஒளி (8:12)
3. நானே ஆடுகளுக்கு வாசல் (10:7, 9)
4. நானே நல்ல மேய்ப்பன் (10:11, 14)
5. நானே உயிர்தெழுதலும் ஜுவனுமாயிருக்கிறேன் (11:25)
6. நானே வழியும் சத்தியமும் ஜுவனுமாயிருக்கிறேன் (14:6)
7. நானே மெய்யான திராட்சச்செடி (15:1, 5)

உ. யோவனுக்கும் மற்ற சுவிசேஷங்களுக்கும் உள்ள வேறுபாடு

1. யோவானின் முதன்மை நோக்கம் இறையியலாயிருந்தாலும் அவரின் வரவாறு மற்றும் பூகோல உபயோகம் மிகவும் துள்ளியமாகவும் விரிவாகவும் உள்ளது. யோவானுக்கும் மற்ற சுவிசேஷகர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளின் சரியான காரணங்கள் நமக்கு தெளிவாய் இல்லை.
   அ. ஆரம்ப யூதேயா ஊழியம் (ஆரம்ப தேவாலய சுத்திகரிப்பு)
   ஆ. இயேசுவின் கடைசிவார வாழ்க்கையின் வரிசையான சம்பவபட்டியல் மற்றும் தேதி.
   இ. அவசியமான இறையியல் மறுசீரமைப்பு
2. யோவானுக்கும் மற்ற சுவிசேஷகர்களுக்கும் இடையிலான தெளிவான வேற்றுமைகளைக் குறித்து ஒரு கணம் விவாதிப்பது உதவியாயிருக்கும். எல்டான் லாடு என்ற எழுத்தாளர் தனது "A Theology of the New Testament" என்ற புத்தகத்தில் வேற்றுமைகளை குறித்து:
   அ. "நான்காவது சுவிசேஷம் மற்ற மூன்று சுவிசேஷங்களைவிட மிகவும் மாறுபட்டதாயிருப்பதால் அது இயேசுவின் போதனைகளை சரியாய் சொல்லுகிறதா அல்லது கிறிஸ்துவ விசுவாசம் பாரம்பரியத்தை மாற்றி இறையியல் அர்த்தத்திற்காக வரலாற்று உண்மைகளை முழுங்கிவிட்டதா என்ற நேர்மையான கேள்விகளை நேர்காண வேண்டி உள்ளது." (ப. 215)
   ஆ. "நம் கைகளில் உள்ள தீர்வு என்னவென்றால், இயேசுவின் போதனைகள் யோவானின் மரபு மொழிகளால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது சரியான தீர்வாய்யிருந்தால் மற்றும் நான்காவது சுவிசேஷம் யோவானின் மரபு மொழியினால் சொல்லப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு நாம் வந்தோமானால், இந்த முக்கிய கேள்வி தொடரும்: எந்த

அளவிற்கு நான்காவது சுவிசேஷத்தின் இறையியல் இயேசுவையல்லாமல் யோவானுடையது? எந்த அளவிற்கு யோவானின் மனம் இயேசுவின் போதனைகளை உட்கிரகித்து தன்மயமாக்கி நாம் பெற்றிருக்கிறது யோவானின் விளக்கமேயல்லாமல் இயேசுவின் சுய போதனையின் சரியான பிரதிபலிப்பல்ல?" (ப. 215)

இ. லாடு, W.F.ஆல்பிரைட்டின் "பாலஸ்தீனம் மற்றும் யோவான் சுவிசேஷத்தில் சமீபத்திய கண்டுப்பிடிப்புகள்"என்ற கட்டுரையை W.D. டேவிஸ் மற்றும் D. டாபுவின் தொகுப்பான "The Background of the New Testament and Its Eschatology" என்ற புத்தகத்திலிருந்து

"யோவான் மற்றும் மற்ற மூன்று சுவிசேஷங்களின் இடையே எந்த ஒரு அடிப்படை வேறுபாடும் இல்லை; மாறாக அவர்களுக்கு இடையே, இயேசுவின் போதனைகளில் உள்ள பாரம்பரிய கோணங்களில் மாற்றம் உள்ளது. குறிப்பாக பண்டைய யூத துறவி பிரிவை சார்ந்த பிக்குகளின் போதனைகளுக்கு நெருக்கமாக உள்ளது.

இயேசுவின் போதனைகள் எந்த வகையிலும் சிதைக்கப்பட்டோ, பொய்யாக்கப்பட்டோ அல்லது ஒரு புதிய முக்கியகாரியம் சேர்க்கப்படவோ இல்லை. ஆரம்ப கால சபையின் தேவைகள் சுவிசேஷங்களில் சேர்க்கப்பட வேண்டிய காரியங்களை முடிவு செய்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சபையின் தேவைகள் எந்த ஒரு புதிய கண்டுப்பிடிப்புகளையோ அல்லது இறையியல் முக்கியத்துவம் வாய்ந்த புதுமையையோ சேர்க்க எந்த ஒரு காரணமும் இல்லை.

புதிய ஏற்பாடு அறிஞர்கள் மற்றும் இறையியல் ஆர்வலர்களின் ஒரு விசித்திர யூகம் என்னவென்றால், இயேசுவின் எண்ணங்கள் குருகியது, யோவான் மற்றும் மற்ற சுவிஷேகர்கள் இடையே நாம் காணும் எந்த ஒரு வேற்றுமையும், ஆரம்ப கால கிறிஸ்துவ இறையியல் வேறுப்பாடே காரணம். ஒவ்வொரு சிறந்த சிந்தனையாளர் மற்றும் குணவான்களின் வெவ்வேறு நண்பர்கள் மற்றும் கேட்பவர்களும் தங்களுக்கு பயனுள்ளதாக அல்லது உகந்ததாக தெரிவதையே புரிந்துக்கொள்ள முற்படுவார்கள்" (ப. 170-171)

ஈ. மீண்டும் ஜார்ஜ் E. லாடு:

“வேறுப்பாட்டின் காரணம் யோவான் இறையியலாகவும், மற்ற சுவிஷேகர்கள் இறையியல் இல்லாதவர்களாகவும் அல்ல, ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையில் இறையியலாய் எழுதியிருக்கிறார்கள். வரலாற்று விளக்கம் நமக்கு உண்மை சம்பவங்களை மட்டுமே குறித்துக்காட்டுகிறதே தவிர வெறும் நிகழ்வுகளின் தொகுப்பையல்ல. யோவான் ஒரு இறையியல் விளக்கம் என்றால், அது யோவான் வரலாற்றில் நடந்த சம்பவங்கள் என்று நம்பிய விளக்கங்களே. வெளிப்படையாக மற்ற சுவிசேஷகர்களின் நோக்கம் இயேவின் சரியான வார்த்தைகளை அறிக்கையிடுவதோ அல்லது இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளை சரிதையாய் கொடுப்பதோ அல்ல. அவர்கள் இயேசுவையும் அவரது போதனை தொகுப்புகளுமாகும். மத்தேயு மற்றும் லூக்கா சுதந்திரமாக மாற்குவின் எழுத்தை மறுசீரமைத்து இயேசுவின் போதனைகளை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். யோவான், மத்தேயு மற்றும் லூக்காவைவிட அதிக சுதந்திரத்தை உபயோகப்படுத்தியதன் காரணம், அவர் நமக்கு ஒரு மிக ஆழமான மற்றும் உண்மையான இயேசுவை நமக்கு காண்பிக்க முற்பட்டதுத்தான்.” (ப. 221-222)

# ஆசிரியர்

அ. இந்த சுவிசேஷம் பெயரில்லாதது ஆனால் யோவானின் எழுத்து குறிப்புகளை தெளிவாய் காண்பிக்கிறது.

1. இவர் தன் கண்களால் கண்ட ஒரு சாட்சி (cf. 19-35)
2. “அன்பான சீடன்” என்ற சொற்றொடர் (போலிகிராத்து மற்றும் ஐரீனியஸ் இது அப்போஸ்தலராகிய யோவான் என்று நமக்கு அடையாளம் காட்டுகின்றனர்)
3. யோவான், செபெதேயுவின் குமாரன், பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஆ. வரலாற்று அமைப்பு இந்த நற்செய்தியில் தெளிவாக உள்ளது, எனவே, ஆசிரியர் யார் என்பதை புரிந்துக்கொள்வது கடிணம் அல்ல. இது ஒரு ஊக்கமான ஆசிரியரால் உறுதியாய் எழுதப்பட்டது என்பது முக்கியம்!

யோவான் இந்த சுவிசேஷத்தின் ஆசிரியர் மற்றும் எழுத்து காலம் இதன் உத்வேகத்தை பாதிப்பதாக இல்லை, ஆனால் விமர்சகர்கள் வரலாற்று அமைப்பு மற்றும் சுவிசேஷம் எழுதப்பட்ட சந்தர்ப்பமும் முக்கியம் என்கிறார்கள்.

யோவானின் இரட்டையை ஒப்பிட்டு

1. யூத இரண்டு காலங்கள்
2. கும்ரான் ஆசிரியர்களின் நீதி சார்ந்த போதனை
3. சுராஸ்ரிய மதம்
4. ஞான சிந்தனை
5. இயேசுவின் தனிப்பட்ட முன்னோக்கு?

இ. ஆரம்ப பாரம்பரியப்படி யோவான் ஒரு அப்போஸ்தலன், செபெதேயுவின் மகன், ஒரு மனிதன், சாட்சியின் ஆதாரம். இது தெளிவுப்படுத்தப்பட வேண்டியது, ஏனென்றால் இரண்டாம் நூற்றாண்டு வெளி ஆதாரங்கள் இந்த சுவிசேஷத்தின் உற்பத்தியை மற்றவர்களோடு இணைக்கிறது.

1. சக விசுவாசிகள் மற்றும் எபேசுவின் மூப்பர்கள் முதிர்ந்து கொண்டிருந்த அப்போஸ்தலரை இந்த சுவிசேஷத்தை எழுத உற்சாகப்படுத்தினார்கள் (யூசேபியஸ், அலெக்சாண்டிரியாவின் கிளமெண்டை மேற்கோள்காட்டுகிறார்)
2. ஒரு சக அப்போஸ்தலன், அந்திரேயா (முரட்டோரியன் துண்டு, ரோமிலிருந்து, கி.பி. 180-200).

ஈ. சில நவீன அறிஞர்கள் பாணி மற்றும் பொருள் அடக்கத்தை கொண்டு மற்றொரு ஆசிரியர் இந்த சுவிசேஷத்தை எழுதியிருக்க கூடும் என்று யூகிக்கின்றனர். பலர் ஆரம்ப இரண்டாம் நூற்றாண்டை தேதியாக கொள்கின்றனர் (கி.பி. 115 முன்).

1. யோவானின் போதனைகளை நினைவில் கொண்ட (J. Weiss, B. Lightfoot, C.H. Dodd, O. Cullmann, R.A. Culpepper, C.K. Barrett) ஒரு சீடனால் எழுதப்பட்டது (யோவானிய செல்வாக்கு வட்டம்)
2. "மூத்த யோவான்"(யோவான் அப்போஸ்தலனின் இறையியல் மற்றும் சொல்வவலத்தில் ஆர்வம்கொண்டிட ஆரம்ப ஆசிய தலைவர்களில் ஒருவர்). பாபியஸின் பகுதியில் குறிக்கப்பட்டு (கி.பி. 70-146) யூசேபியஸ் ஆல் மேற்கோல்காட்டப்பட்டது).

உ. யோவான் தான் ஆசிரியர் என்பதற்கான முதன்மை பொருள் ஆதாரம்.

1. உள் ஆதாரங்கள்

அ. ஆசிரியர் யூத போதனைகள், சடங்குகள் மற்றும் பழைய ஏற்பாடு உலக பார்வையை அறிந்திருந்தார்.

ஆ. ஆசிரியர் கி.பி. 70 திற்கு முன்பான பாலஸ்தீனம் மற்றும் எருசலேமின் நிலையை அறிந்திருந்தார்.

இ. ஆசிரியர் தன்னை ஒரு சாட்சியாக கூறுகிறார்.

1) 1:14

2) 19:35

3) 21:24

ஈ. ஆசிரியர் அப்போஸ்தலர்களில் ஒருவர். அவருக்கு சில காரியங்கள் தெரிந்திருந்தது;

1) நேரம் மற்றும் இடம் பற்றிய விவரங்கள் (இரவு வழக்கு விசாரனை)

2) எண்களின் விவரங்கள் (தண்ணீர் குடம் 2:6, மற்றும் மீண்கள் 21:11)

3) நபர்களின் விவரங்கள்

4) ஆசிரியர் நிகழ்வுகள் மற்றும் அதன் விளைவுகளை அறிந்திருந்தார்

5) ஆசிரியர் "அன்பான சீடன்" என்று நியமிக்கப்பட்டவர் என்று தெரிகிறது

அ. 13:23, 25

ஆ. 19:26-27

இ. 20:2-5, 8

ஈ. 21:7, 20-24

6) ஆசிரியர் பேதுருவோடு இணைந்து உள்வட்டத்தில் ஒரு உருப்பினர் என்பது தெரிகிறது.

அ. 13:24

ஆ. 20:2

இ. 21:7

7) யோவான், செபெதேயுவின் குமாரன் என்ற பெயர், இந்த சுவிசேஷத்தில் தோன்றவில்லை, இது மிகவும் வழக்கத்திற்கு மாறாக தெரிகிறது. ஏனெனில் அவர் அப்போஸ்தலர் உள்வட்டத்தில் ஒரு உறுப்பினராக இருந்தார்.

2. வெளி ஆதாரங்கள்

அ. இந்த சுவிசேஷம் கீழ்கண்டவர்களுக்கு அறியப்பட்டிருந்தது.

1. ஜரினியஸ் (கி.பி. 120-202), போலிகார்ப்போடு தொடர்புடைய, யோவான் அப்போஸ்தலனை அறிந்திருந்த (cf. யூசிபியஸின் "Historical Eccleasticus 5:20:6-7) "இயேசுவின் மார்பில்

சாய்ந்திருந்த அவருடைய சீடனான யோவான் தாமே ஆசியாவிலுள்ள எபேசுவில் இந்த சுவிசேஷத்தை வழங்கினார்” (Haer 3:1:1, யூசிபியஸின் Hist. Eccl. 5:8:4 யில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது).

2. அலெக்ஸாண்ட்ரியாவின் கிளமெண்ட் (கி.பி. 153-217) “யோவான் தனது நண்பர்களால் வலியுருத்தப்பட்டு மற்றும் பரிசுத்த ஆவியால் தெய்வீகமாக உந்தப்பட்டு, ஒரு ஆன்மீக சுவிசேஷத்தை வழங்கினார்” (யூசிபியஸின் Historical Eccleasticus 6:14:7)
3. இரத்த சாட்சி ஜஸ்டின் (கி.பி. 110-165) தனது Dialogue with Tropho 81:4
4. டேர்டூலியன் (கி.பி. 145-220)

ஆ. யோவானின் ஆசிரியர்துவம் ஆரம்ப சாட்சிகளால் வலியுருத்தப்படுகிறது.

1. போலிகார்ப் (கி.பி. 70-156, ஐரினேயஸால் குறிக்கப்பட்ட) சிமர்னாவின் மூப்பர்.
2. பாபியஸ் (கி.பி. 70-146 ரோம் மற்றும் எபேசுவின் எதிர்ப்பு - மார்க்கோனாய்ட் முகவுரை பதிவு). பிரிஜியாவின் ஐராபோலிஸின் மூப்பர், யோவான் அப்போஸ்தலரின் சீடர்.

ஊ. பாரம்பரிய ஆசிரியர் நம்பிக்கையை சந்தேகிக்கும் காரணங்கள்.

1. ஞான கருப்பொருள்களோடு சுவிசேஷத்தின் தொடர்பு
2. அதிகாரம் 21ன் தெளிவான இணைப்பு
3. மற்ற சுவிசேஷங்களோடான கால முரண்பாடுகள்
4. யோவான் தன்னைதானே “அன்பான சீடன்” என்று குறிப்பிட்டிருக்க வாய்பில்லை
5. யோவானில் இயேசு மற்ற சுவிசேஷங்களில் உபயோகிக்காத சொல்லகராதியை உபயோகித்திருப்பது.

எ. இதன் ஆசிரியர் யோவான் என்று கருதினால், அவரை எப்படிப்பட்டவராய் நாம் எண்ணிக்கொள்ளலாம்?

1. அவர் எபேசுவிலிருந்து இதை எழுதினார் (ஐரினேயஸ் “எபேசுவிருந்து இந்த சுவிசேஷத்தை வழங்கினார்”)
2. அவர் தன் முதிர்வயதில் இதை எழுதினார் (ஐரினேயர் யோவான் ட்ராஜன் மன்னன் ஆட்சிவரை யோவான் வாழ்ந்ததாக கூறுகிறார், கி.பி. 98-117).

# காலம்

அ. யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டது என்று நாம் யூகித்தால்

1. கி.பி. 70திற்கு முன்பு, எருசலேம் ரோம படைதளபதி (பின்பு மன்னன்) தீத்துவால் அழிக்கப்பட்டது.
   - அ. யோவான் 5:2 ல், "எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு."
   - ஆ. மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்பட்டிருக்கும் ஆரம்பகால தலைப்பு "சீடர்கள்" அப்போஸ்தல குழுவை குறிக்கிறது.
   - இ. முதல் நூற்றாண்டுக்கு பின்னான ஞான பொருள்கள் என்ற எண்ணப்பட்டது. இப்போது சாக்கடல் சுருள்கள் கண்டுபிடிப்பின் மூலம் அதின் இறையியல் சொற்கள் முதல் நூற்றாண்டில் உபயோகிக்கப்பட்டது என்று காண்பிக்கிறது.
   - ஈ. எருசலேம் நகரம் மற்றும் அதின் தேவாலயத்தின் கி.பி. 70 ல் அழிக்கப்பட்டதை குறித்து எந்த ஒரு குறிப்பும் இல்லை.
   - உ. பிரபல அமெரிக்க தொல்பொருள் ஆராய்ச்சியாளர் W.F. ஆல்பிரைட் இந்த சுவிசேஷம் 70களின் பிற்பகுதியிலோ அல்லது 80களிலோ எழுதப்பட்டது என்று குறிப்பிடுகிறார்.
2. முதல் நூற்றாண்டின் பிற்பகுதி
   - அ. யோவானின் வளர்ந்த இறையியல்
   - ஆ. எருசலேமின் வீழ்ச்சி ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடைப்பெற்றதால் குறிப்பிடபடவில்லை.
   - இ. யோவானின் ஞான வகை சொற்றொடர் மற்றும் முக்கியத்துவ பயன்பாடு
   - ஈ. ஆரம்ப கால சபை பாரம்பரியம்
     1. ஐரினேயஸ்
     2. யூசேபியர்

ஆ. நாம் ஆசிரியர் "மூப்பராகிய யோவான்" என்று யூகித்தால் எழுதப்பட்ட காலம் இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் அமைகிறது. இந்த கோட்பாடு டையோனைசியஸ்யிடம் இருந்து துவங்கியது, அவர் இந்த சுவிசேஷம் யோவான் அப்போஸ்தலனால் இலக்கியகாரணத்திற்காக எழுதப்படவில்லை என்கிறார். யூசேபியஸ், வெளிப்படுத்தினவிசேஷம் இறையியல் காரணங்களால் யோவான் அப்போஸ்தலனால் எழுதப்படவில்லை என்றும், பாபியஸின் குறிப்பினால் தனது (Historical Eccleasticus 3:39:5, 6)ல் வேறு ஒரு "யோவான்" அந்த சரியான காலத்தில்

இருந்திருக்கிறார். இரண்டு "யோவான்" (1) அப்போஸ்தலன் மற்றும் (2) மூப்பர் என்று உணர்ந்ததாக தெரிவிக்கிறார்.

## பெறுநர்கள்

அ. முதலில் இந்த சுவிசேஷம் ரோமானிய மாகாணத்தில் ஆசியா மைனரில், குறிப்பாக எபேசுவுக்கு எழுதப்பட்டது.

ஆ. நாசரேத்தின் இயேசுவின் வாழ்க்கை மற்றும் தனித்துவம் ஆழமான மற்றும் எளிமையான முறையில் சொல்லப்பட்டதால் இந்த சுவிசேஷம் கிரேக்க மற்றும் ஞான குழுக்கள் மத்தியில் மிக பிரபலமாயிருந்தது.

## நோக்கங்கள்

அ. சுவிசேஷம் தாமே அதன் நற்செய்தி நோக்கத்தை தெளிவுப்படுத்துகிறது, 20:30-31

1. யூத வாசகர்களுக்கு
2. யூதரல்லாத வாசகர்களுக்கு
3. தொடங்குகிற ஞான வாசகர்களுக்கு

ஆ. விசுவாச நியாயத்தின் உந்துதல் தெரிகிறது.

1. யோவான்ஸ்நானகரின் வெறித்தனமான சீடர்களுக்கு எதிராக
2. துவங்குகிற தவறான ஞான ஆசிரியர்களுக்கு (குறிப்பாக முகவுரை) எதிராக; இந்த தவறான ஞான போதனைகள் மற்ற புதிய ஏற்பாடு புத்தகங்களின் பின்னனியாகவும் உள்ளது.
   அ. எபேசியர்
   ஆ. கொலோசெயர்
   இ. போதக நிருபங்கள் (I தீமோத்தேயு, தீத்து, II தீமோத்தேயு)
   ஈ. I யோவான் (I யோவான் சுவிசேஷத்தின் ஒரு மேலுரையாகவும் இருக்கலாம்)

இ. யோவான் 20:31ன் நோக்கம் அதன் நிகழ்கால குறிப்பினால் நற்செய்தியின் விடாமுயற்ச்சி கோட்பாடு இரட்ச்சிப்பை விவரிக்கிறது என்று புரிந்துகொள்ள வாய்ப்புள்ளது. இந்த அர்த்தத்தில் யோவான், யாக்கோபை போல், ஆசியா மைனரில் சில குழுக்கள் (cf. II பேதுரு 3:15-16) பவுலின் இறையியலை அதிக முக்கியத்துவத்தை சமநிலைப்படுத்த

முயற்ச்சித்திருக்கலாம். ஆரம்ப சபை எபேசுவை பவுலோடல்லாமல் யோவானோடு அடையாளம் காண்பது ஆச்சரியமே. (cf. F.F. புரூஸின் பேதுரு, ஸ்தேவான், யாக்கோபு மற்றும் யோவான்; பவுலின் இறையியலல்லாத கிறிஸ்துவ ஆய்வு, ப. 120 -121)

ஈ. முடிவுரை (அதிகாரம் 21), ஆரம்ப சபையின் சில குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பதாய் தெரிகிறது.

1. யோவான் மற்ற சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருப்பதற்கு கூடுதலாய் சொல்லிருக்கிறார். எனினும், அவர் இயேசுவின் யூதேயா ஊழியத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் குறிப்பாக எருசலேம்.
2. இணைப்பு பகுதி அதிகாரம் 21ல் விவாதித்திருக்கிற மூன்று கேள்விகள்.
   - அ. பேதுருவின் மீட்பு
   - ஆ. யோவானின் அதிக வாழ்நாள்
   - இ. இயேசுவின் தாமதமான வருகை.

உ. சிலர் யோவான் வேண்டுமென்றே புனித சடங்குகளை முக்கியத்துவப்படுத்தாமல் புறகணிப்பதாய் காண்கிறார்கள் அல்லது சரியான சூழ்நிலைகளில் அதிகாரம் 3 (ஞானஸ்நானம்) மற்றும் அதிகாரம் 6 (திருவிருந்துக்காகவும்) நியமித்திருப்பதாய் விவாதிக்கிறார்கள்.

# யோவான் சுவிசேஷத்தின் சுருக்கத்தின் அம்சங்கள்

அ. ஒரு தத்துவ/இறையியல் முகவுரை (1:1-8) மற்றும் ஒரு நடைமுறை முடிவுரை (அதிகாரம் 21)

ஆ. இயேசுவின் பொது ஊழியத்தின்போது நடந்த ஏழு அதிசய அடையாளங்கள் (அதிகாரம் 2-12) மற்றும் அதன் விளக்கங்கள்:

1. கானாவின் கல்யாண விருந்தில் தண்ணீரை திராட்சரசமாய் மாற்றுதல் (2:1-11)
2. கப்பர்நகூமில் நீதிமன்ற அதிகாரியின் மகனை குணப்படுத்துதல் (4:46-54)
3. எருசலேமில் பெதஸ்தா குளத்திலே சப்பாணியை குணப்படுத்துதல் (5:1-18)
4. கலிலேயாவில் 5000 பேரை போஷித்தல் (6:1-15)
5. கலிலேயா கடலின் மீது நடந்தல் (6:16-21)

6. எருசலேமில் பிறவி குருடனை குணமாக்குதல் (9:1-41)
7. பெத்தானியாவில் லாசருவை உயிர்ப்பித்தல் (11:1-57)

இ. தனிநபர் பேட்டிகள் மற்றும் உரையாடல்கள்
1. யோவான்ஸ்நானகன் (1:19-34; 3:22-36)
2. சீடர்கள்
   அ. அந்திரேயா மற்றும் பேதுரு (1:35-42)
   ஆ. பிலிப்பு மற்றும் நாத்தான்வேல் (1:43-51)
3. நிக்கோதேமு (3:1-21)
4. சமாரிய பெண் (4:1-45)
5. எருசலேமிலுள்ள யூதர்கள் (5:10-47)
6. கலிலேயா கூட்டங்கள் (6:22-66)
7. பேதுருவும் மற்ற சீடர்களும் (6:67-71)
8. இயேசுவின் சகோதரர்கள் (7:1-13)
9. எருசலேமிலுள்ள யூதர்கள் (7:14-8:59; 10:1-42)
10. மேல் வீட்டில் சீடர்கள் (13:1-17:26)
11. யூத சிறைபிடிப்பு மற்றும் விசாரனை (18:1-27)
12. ரோமானிய விசாரணை (18:28-19:16)
13. உயிர்த்தெழுதலுக்கு பின்னான உறையாடல்கள், 20:11-29
   அ. மரியாளுடன்
   ஆ. பத்து அப்போஸ்தலருடன்
   இ. தோமாவுடன்
14. பேதுருவுடனான முடிவுரை உரையாடல் 21:1-25
15. (17:53-8:11, விபச்சார பெண்ணின் கதை, யோவான் சுவிசேஷத்தில் முதலில் இல்லாதது)

ஈ. சில வழிபாடு/திருவிழா நாட்களில்
1. ஓய்வு நாட்கள் (5:9; 7:22; 9:14; 19:31)
2. பஸ்கா பண்டிகை (2:13; 6:4; 11:55; 18:28)
3. கூடார பண்டிகை (அதிகாரம் 8-9)
4. ஹனுக்கா (வெளிச்சத்தின் பண்டிகை cf. 10:22)

உ. "நானே" அறிக்கைகளின் பயன்பாடு
1. "நானே 'அவர்'" (4:26, 6:20; 8:24, 28, 54-59; 13:19; 18:5-6, 8)
2. "நானே ஜுவ அப்பம்" (6:35, 41, 48, 51)
3. "நானே உலகத்தின் வெளிச்சம்" (8:12; 9:5)
4. "நானே ஆட்டுப்பட்டியின் வாசல்" (10:7, 9)

5. “நானே நல்ல மேய்ப்பன்” (10:11, 14)
6. “நானே உயிர்த்தெழுதலும் ஜுவனும்” (11:25)
7. “நானே வழி, சத்தியம், ஜுவன்” (14:6)
8. “நானே மெய்யான திராட்சசெடி” (15:1, 5)

## வாசிப்பின் முதல் தொடர்நிலை (பார்க்க பக்கம் V)

இது ஒரு ஆய்வு வழிகாட்டி விளக்கம், அதாவது உங்கள் சொந்த வேத விளக்கங்களுக்கு நீங்களே பொறுப்பு. ஒவ்வொருவரும் நாம் பெற்றிருக்கும் ஒளியின்படி நடக்க வேண்டும். நீங்கள், வேதம் மற்றும் பரிசுத்த ஆவியே விளக்கத்தின் முன்னுரிமையாய் இருக்கிறீர்கள். நீங்கள் இதை ஒரு வர்ணனையாளரிடம் விட்டுவிடக் கூடாது.

ஒரே அமர்வில் வேத புத்தகத்தை படிக்க வேண்டும். உங்கள் சொந்த வார்த்தையில் முழுபுத்தகத்தின் மைய கருத்தை குறிப்பிடுங்கள்.

1. முழுபுத்தகத்தின் மைய கருத்து

2. இலக்கிய வகை

## வாசிப்பின் இரண்டாம் தொடர்நிலை (பார்க்க பக்கம் V)

இது ஒரு ஆய்வு வழிகாட்டி விளக்கம், அதாவது உங்கள் சொந்த வேத விளக்கங்களுக்கு நீங்களே பொறுப்பு. ஒவ்வொருவரும் நாம் பெற்றிருக்கும் ஒளியின்படி நடக்க வேண்டும். நீங்கள், வேதம் மற்றும் பரிசுத்த ஆவியே விளக்கத்தின் முன்னுரிமையாய் இருக்கிறீர்கள். நீங்கள் இதை ஒரு வர்ணனையாளரிடம் விட்டுவிடக் கூடாது.

ஒரே அமர்வில் இரண்டாம் முறையாக முழுபுத்தகத்தையும் படிக்கவும். முக்கிய பாடங்களின் சுருக்கத்தை மற்றும் பொருளை ஒரேவரியில் வெளிப்படுத்துங்கள்.

1. முதல் இலக்கிய பகுதியின் பொருள்

2. இரண்டாம் இலக்கிய பகுதியின் பொருள்

3. மூன்றாம் இலக்கிய பகுதியின் பொருள்

4. நான்காம் இலக்கிய பகுதியின் பொருள்

5. முதலியன